
**ஜனவரி – 14**

# TNPSC துளிகள்

- 2026 ஆம் ஆண்டில் காமன்வெல்த் நாடுகளின் நாடாளுமன்றங்களின் சபாநாயகர்கள் மற்றும் அவைத் தலைவர்களின் 28வது மாநாட்டை (CSPOC) இந்தியா நடத்த உள்ளது.
- பெங்களூரு மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (BMCRI) ஆனது, தென் இந்தியாவின் முதல் தொற்று நோய் ஆராய்ச்சி மற்றும் நோயறிதல் ஆய்வகத்தினை (IRDL) நிறுவுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- ஒன்றிய இளையோர் விவகாரத் துறையானது, புது டெல்லியில் விக்ஸித் பாரத் இளம் தலைவர்கள் பேச்சுவார்த்தையின் 2வது நாளை வெற்றிகரமாகத் தொடங்கியுள்ளது.
- மும்பையில் உள்ள சத்ரபதி சிவாஜி மகாராஜா சர்வதேச விமான நிலையம் (CSMIA) ஆனது, உலகளவில் புகழ்பெற்ற சர்வதேச விமான நிலைய சபையின் (ACI) மதிப்புமிக்க ஐந்தாம் நிலை அங்கீகாரத்தினைப் பெற்ற இந்தியாவின் முதல் விமான நிலையமாக மாறியுள்ளது.
- மலேசிய நாடானது, இந்திய நாட்டினருக்கான நுழைவு இசைவுச் சீட்டு விலக்கினை 2026 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதி வரை அதிகாரப்பூர்வமாக நீட்டித்துள்ளது என்ற நிலையில் இதன் மூலம் இந்தியர்கள் நுழைவு இசைவுச் சீட்டு இல்லாமல் மலேசிய நாட்டிற்கு 30 நாட்கள் வரையிலான பயணங்களை மேற்கொள்ளலாம்.

# தமிழ்நாடு செய்திகள்

## 1882 ஆம் ஆண்டு தமிழ்நாடு வனச் சட்டத்தின் திருத்தம்




- தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றமானது 1882 ஆம் ஆண்டு தமிழ்நாடு வனச் சட்டத்தினை மேற்கொண்டு திருத்தியமைப்பதற்கான ஒரு மசோதாவினை நிறைவேற்றி உள்ளது.
- காடிழப்பை ஈடு செய்வதற்காக என்று காடு வளர்ப்பு நிலங்களை காப்புக் காடுகளாக

அறிவிக்கும் ஒரு செயல்முறையை விரைவுபடுத்துவதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.

- ❖ எந்தவொரு வன நிலமும், வனம் சாராத நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப் படும் போதெல்லாம், அந்தப் பயனர் முகமையானது அதற்கானப் பதிலீட்டுக் காடு வளர்ப்பு நோக்கத்திற்காக குறிப்பிட்ட அளவிலான நிலத்தை வழங்க வேண்டும்.
- ❖ இந்தச் சட்டத்தின் 16வது பிரிவின் கீழ் இந்த அறிவிப்பை வெளியிடச் செய்வதற்கான அரசாங்கத்தின் பெரும் அதிகாரங்களை மாவட்ட ஆட்சியர் பதவிக்குக் குறையாத தகுதியிலான வருவாய்த் துறை அதிகாரிக்கு, இந்தச் சட்டத்தின் 65வது பிரிவினைத் திருத்துவதன் மூலம் வழங்குவதற்கும் இந்த மசோதா முயல்கிறது.

## கலைஞர் பொற்கிழி விருது 2025

- ❖ மு.கருணாநிதி பொற்கிழி வென்ற தமிழ் அறிஞர்கள் மற்றும் கலைஞர்களுக்கு தலா 1 லட்சம் ரூபாய் பரிசு வழங்கப்பட்டுள்ளது.
- ❖ இதில் அருணன் உரைநடை/ஆராய்ச்சிக்கான விருதையும், நெல்லை ஜெயந்தா கவிதைக்கான விருதையும், சுரேஷ் குமார் இந்திரஜித் புதினத்திற்கான விருதையும், N.ஸ்ரீராம் சிறுகதைகளுக்கான விருதையும், கலை இராணி நாடகத்திற்கான விருதையும், நிர்மால்யா மொழிபெயர்ப்புக்கான விருதையும் பெற்றனர்.
- ❖ செம்மல் K.கனதியின் கற்பகம் புத்தகாலயம் ஆனது சிறந்த பதிப்பகத்திற்கான BAPASI / பாபாசி விருதைப் பெற்றுள்ளது.
- ❖ R.கோதண்டராமன் சிறந்த நூலகர் விருதினையும், பதிப்பாளர் செம்மல் S.மெய்யப்பன் சிறந்தப் புத்தக விற்பனையாளருக்கான விருதையும் வென்றனர்.




## புதிய தமிழ்நாடு பாலியல் துன்புறுத்தல் தடை மசோதா 2025

- ❖ 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பெண்களின் பாலியல் துன்புறுத்தல் தடை (திருத்தம்) சட்டத்தினைத் திருத்துவதற்கான மசோதாவினை தமிழ்நாடு சட்டமன்றம் தாக்கல் செய்துள்ளது.
- ❖ இதன்படி குற்றம் சாட்டப்பட்ட நபர்கள், தாங்கள் துன்புறுத்தப்பட்டதாகக் கூறப்படும் பெண்களைத் தொடர்பு கொள்வதைத் தடுக்க "பாதுகாப்பு உத்தரவுகளை" வெளியிட உதவும் வகையில் 7C பிரிவினை இணைக்க இந்த மசோதா முயல்கிறது.

- பாரதீய நியாய சன்ஹிதாவின் (BNS) 74-79வது பிரிவு அல்லது 296வது பிரிவின் கீழ் தண்டனைக்குரிய குற்றங்களைச் செய்பவர்களுக்கு எதிராக மிகவும் கடுமையான நடவடிக்கை எடுப்பதை உறுதி செய்யும் தண்டனைகளை அதிகரிப்பதையும் இந்த மசோதா நோக்கமாகக் கொண்டுள்ளது.

**தண்டனை அதிகரிப்பு**

| குற்றங்கள் | முன்பு | தற்போது |
|---|---|---|
| பாலியல் வன்புணர்ச்சி | 10 ஆண்டுகள் கடுங்காவல் (குறைந்தபட்சம்) | 14 ஆண்டுகள் கடுங்காவல் (குறைந்தபட்சம்) |
| நெருங்கிய உறவினர் (அ) காவல்துறை ஊழியர் பாலியல் வன்புணர்ச்சியில் ஈடுபட்டால் | 10 ஆண்டுகள் கடுங்காவல் (குறைந்தபட்சம்) | 20 ஆண்டுகள் கடுங்காவல் (குறைந்தபட்சம்) |
| 12 வயதுக்குட்பட்ட சிறுமி மீது பாலியல் வன்புணர்ச்சி | 20ஆண்டுகள் கடுங்காவல் (குறைந்தபட்சம்) (அ) ஆயுள் தண்டனை (அ) மரண தண்டனை | ஆயுள் (அ) மரண தண்டனை |
| பாலியல் வன்புணர்ச்சி மற்றும் மரணத்தை விளைவிக்கும் குற்றம் | 20 ஆண்டுகள் கடுங்காவல் (குறைந்தபட்சம்) | ஆயுள் தண்டனை |
| கூட்டுப் பாலியல் வன்புணர்ச்சி | ஆயுள் சிறை | மரண தண்டனை |
| மீண்டும் மீண்டும் குற்றம் இழைத்தவர்கள் | ஆயுள் சிறை | மரண தண்டனை |
| பாலியல் தொல்லை | 3 ஆண்டுகள் | 5 ஆண்டுகள் |
| பெண்ணை பின் தொடர்தல் | NIL | முதல் முறை 5 ஆண்டுகள் சிறை, 2வது முறை 7 ஆண்டுகள் |
| ஆசிட் வீச்சு | 10 ஆண்டுகள் சிறை - ஆயுள் தண்டனை (அதிகபட்சம்) | ஆயுள் (அ) மரண தண்டனை |
| ஆசிட் வீச முயற்சி | 5 முதல் 7 ஆண்டுகள் வரை | 10 ஆண்டுகள் சிறை - ஆயுள் தண்டனை (அதிகபட்சம்) |

## உலக அயலகத் தமிழர் தினம் 2025




- ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 12 ஆம் தேதியானது உலக அயலகத் தமிழர் தினமாகக் கொண்டாடப்படுகிறது.
- தமிழ்ப் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தினைக் கொண்டாடும் வகையில், 2025 ஆம் ஆண்டிற்கான உலக அயலகத் தமிழர் தினக் கண்காட்சியை தமிழக அரசு துவக்கி வைத்தது.

- 'எத்திசையும் தமிழணங்கே' என்ற கருத்துருவின் கீழ் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.
- கடந்த ஆண்டு இந்தக் கண்காட்சியானது 'தமிழ் வெல்லும்' என்ற ஒரு கருத்துருவின் கீழ் நடத்தப் பட்டது.

# தேசியச் செய்திகள்

## 8வது NPOP




- புது டெல்லியில் 8வது தேசிய இயற்கை முறையிலான உற்பத்தித் திட்ட நிகழ்ச்சி ஆனது நடத்தப் பட்டது.
- அடுத்த மூன்று ஆண்டுகளில் இயற்கை வேளாண் ஏற்றுமதியானது 20,000 கோடி ரூபாயை எட்டும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.
- இந்த நிகழ்வின் போது வேளாண் உற்பத்திக்கு உதவும் வகையில் புதிய இணைய தளங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன:
- NPOP இணைய தளம்: இயற்கை வேளாண்மைப் பங்குதாரர்களுக்கு மிக அதிக தெரிவு நிலையை வழங்குவதோடு, அதற்கான செயல்பாடுகளை எளிதாக்கும்.
- இயற்கை வேளாண்மை ஊக்குவிப்பு இணைய தளம்: விவசாயிகள், விவசாயிகள் உற்பத்தி அமைப்புகள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் தங்கள் சான்றளிக்கப்பட்ட இயற்கை வேளாண் பொருட்களை இங்குக் காட்சிப்படுத்தி, வர்த்தக வாய்ப்புகளை உருவாக்கி உலகளாவிய வாங்கும் நிறுவனங்களுடன் தொடர்பினை ஏற்படுத்தலாம்.
- TraceNet 2.0: தடையற்றச் செயல்பாடுகளுக்கான மேம்படுத்தப்பட்ட இயங்கலை வழி இயற்கை வேளாண்மைத் தன்மை கண்காணிப்பு அமைப்பு மற்றும் ஒழுங்குமுறை மேற்பார்வைக்கான மேம்படுத்தப்பட்ட கருவிகள்.
- APEDA இணைய தளம்: வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் விற்பனை பங்குதாரர்களின் நலனுக்காக மேம்பட்ட ஒரு பயனர் அனுபவம் மற்றும் தகவலுடன் கூடிய APEDA இணைய தளமானது மறுவடிவமைப்பு செய்து புதுப்பிக்கப் பட்டுள்ளது.

- AgriXchange இணைய தளம்: மறுவடிவமைப்பு செய்து புதுப்பிக்கப்பட்ட AgriXchange என்ற இணைய தளமானது, பயனர்களுக்கு ஏதுவாக வேளாண் ஏற்றுமதிகளின் தரவு பகுப்பாய்வு மற்றும் அறிக்கைகள் மற்றும் ஒரு தரவு உருவாக்கத்திற்கு உதவுகிறது, என்பதால் இது பொது மக்கள் எளிதில் அணுகக்கூடியதாக அமைகிறது.

## மாநிலங்களுக்கான வரி பகிர்வு 2025

- மூலதனச் செலவினங்களை மிக நன்கு அதிகரிக்கவும், நலத்திட்ட நடவடிக்கைகளுக்கு நிதியளிக்கவும், மாநில அரசுகளுக்கு 1.73 லட்சம் கோடி ரூபாய் வரிப் பகிர்வை மத்திய அரசு வழங்கியுள்ளது.
- இது 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் 89,086 கோடி ரூபாயாக இருந்தது.
- தற்போது, மத்திய அரசினால் வசூலிக்கப்படும் மொத்த வரிகளில் 41% ஆனது ஒரு நிதி ஆண்டில் மாநிலங்களுக்கு பல தவணைகளில் பகிர்ந்தளிக்கப்படுகிறது.
- உத்தரப் பிரதேசம் மிக அதிகபட்சமாக 31,039.84 கோடி ரூபாய் ஒதுக்கீட்டைப் பெற்றது, அதைத் தொடர்ந்து பீகார் 17,403.36 கோடி ரூபாய் மற்றும் மேற்கு வங்காளம் 13,017.06 கோடி ரூபாய் ஒதுக்கீட்டைப் பெற்றது.

| | |
|---|---|
| RAJASTHAN | **10426.78** |
| SIKKIM | **671.35** |
| TAMIL NADU | **7057.89** |
| TELANGANA | **3637.09** |
| TRIPURA | **1225.04** |
| UTTAR PRADESH | **31039.84** |
| UTTARAKHAND | **1934.47** |
| WEST BENGAL | **13017.06** |

# சர்வதேசச் செய்திகள்

## சர்வதேசக் காவல்துறையின் முதல் வெள்ளி அறிவிப்பு

- இந்த முன்னோடி திட்டத்தின் ஒரு பகுதியாக பல்வேறு நாடுகளில் மோசடி செய்யப் பட்ட சொத்துக்களைக் கண்டறிவதற்காக சர்வதேசக் காவல் துறையானது தனது முதல் வெள்ளி அறிவிப்பை வெளியிட்டுள்ளது.
- கடத்தல் குற்றவாளிகளின் சொத்துக்கள் பற்றிய தகவல்களைக் கோரிய இத்தாலியின் வேண்டுகோளின் பேரில் முதல் வெள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.
- இந்த முன்னோடியான ஒரு திட்டத்தில் இந்தியா உட்பட சுமார் 52 உறுப்பினர் நாடுகள் பங்கேற்கின்றன.
- தற்போது, சர்வதேசக் காவல் துறையில் எட்டு வகையான வண்ணக் குறியிடப்பட்ட அறிவிப்புகள் உள்ளன என்ற நிலையில் ஓர் உறுப்பினர் நாடு உலகளவில் குறிப்பிட்ட

வகையான தகவல்களைப் பெற இது அனுமதிக்கிறது.

- சிவப்பு அறிவிப்பு ஆனது ஒரு நாட்டு அரசானது, வேறொரு நாட்டிற்குத் தப்பியோடிய நபர்களைக் காவலில் வைக்கக் கோர அனுமதிக்கிறது.
- மஞ்சள் அறிவிப்பு ஆனது காணாமல் போனவர்களை, பெரும்பாலும் சிறார்களைக் கண்டுபிடிக்க அல்லது தங்களை அடையாளம் காண முடியாத பல்வேறு நபர்களை அடையாளம் காண உதவுகிறது.
- நீல அறிவிப்பு ஒரு குற்றவியல் விசாரணை தொடர்பாக ஒரு நபரின் அடையாளம், இருப்பிடம் அல்லது செயல்பாடுகள் பற்றிய கூடுதல் தகவல்களைச் சேகரிக்கிறது.
- அடையாளம் தெரியாத பொருட்கள் பற்றியத் தகவல்களைத் தேட கருப்பு அறிவிப்பு வெளியிடப்படுகிறது.
- பொது மக்களின் பாதுகாப்பிற்கு மிக அச்சுறுத்தலாகக் கருதப்படுகின்ற ஒரு நபரின் குற்றச் செயல்கள் குறித்து எச்சரிக்கை வழங்குவதற்காக பச்சை அறிவிப்பு வழங்கப் படுகிறது.
- ஆரஞ்சு அறிவிப்பு ஆனது ஒரு நிகழ்வு, ஒரு நபர், ஒரு பொருள் அல்லது பொது மக்களின் பாதுகாப்பிற்கு கடுமையான மற்றும் உடனடி அச்சுறுத்தலை ஏற்படுத்தும் ஒரு செயல் முறை பற்றி எச்சரிக்கிறது.
- ஊதா அறிவிப்பு ஆனது குற்றவாளிகள் பயன்படுத்தும் பலச் செயல்பாட்டு முறைகள், பொருள்கள், சாதனங்கள் மற்றும் பதுங்கு முறைகள் பற்றிய பல்வேறு தகவல்களைத் கோருவதற்கான அல்லது வழங்குவதற்கான அறிவிப்பு.





# சுற்றுச்சூழல் செய்திகள்

## புவி வெப்பமடைதல் வரம்பு மீறப்பட்ட முதல் ஆண்டு

- தொழில்துறைக்கு முந்தையக் காலத்தில் இருந்த பதிவினை விட 2024 ஆம் ஆண்டில் முதல் முறையாக ஆண்டிற்கான சராசரி உலக வெப்பநிலையானது 1.5°C அளவினைத்

தாண்டியது.

- உலக வானிலை அமைப்பின் (WMO) மதிப்பீடு ஆனது, 1850 முதல் 1900 ஆம் ஆண்டு வரையிலான காலக் கட்டமானது தொழில்துறைக்கு முந்தைய அடிப்படை பதிவினை வழங்கப் பயன்படுத்தப்படுவதுடன், ஆறு தரவுத் தொகுப்புகளிலிருந்து பெறப்பட்ட சராசரி உலக வெப்பநிலையைப் பயன்படுத்தி கணக்கிடப்படுகிறது.
- 2024 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஜூன் மாதம் வரையிலான ஒவ்வொரு மாதமும் அந்த மாதங்களில் இது வரை பதிவு செய்யப்பட்ட மிக வெப்பமான மாதங்களாக இருந்தன.
- ஜூலை முதல் டிசம்பர் மாதம் வரை, ஆகஸ்ட் மாதம் தவிர, ஒவ்வொரு மாதமும் 2023 ஆம் ஆண்டிற்குப் பிறகு இரண்டாவது வெப்பமான மாதமாக இருந்தது.
- சராசரி உலக வெப்பநிலையான 15.1 டிகிரி செல்சியஸ் ஆனது - 1991-2020 என்ற காலக் கட்டத்தின் சராசரியை விட 0.72 டிகிரி அதிகமாகவும், முந்தைய அதிகளவு வெப்ப நிலையாக பதிவான 2023 ஆம் ஆண்டிற்கான பதிவினை விட 0.12 டிகிரி அதிகமாகவும் இருந்தது.




## புதிய இந்தோ-பர்மிய எறும்புத் திண்ணி இனங்கள்

- அறிவியல் ஆய்வாளர்கள் அருணாச்சலப் பிரதேச மாநிலத்தில் புதிய இந்தோ-பர்மிய எறும்புத் திண்ணி (மானிஸ் இந்தோபர்மனிகா) இனங்களை அடையாளம் கண்டு ள்ளனர்.
- இது சுமார் 3.4 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு காணப்பட்ட சீன எறும்புத் திண்ணி

(மானிஸ் பென்டாடாக்டைலா) இனத்திலிருந்து வேறுபட்டதாகும்.

- இவை நேபாளம், பூடான், மியான்மர் அருணாச்சலப் பிரதேசம் மற்றும் அசாம் ஆகியப் பகுதிகளில் காணப்பட்டன.





# இதரச் செய்திகள்


## அரசியல் கட்சிகளுக்கான நன்கொடைகள் 2022-23

- பிராந்திய அரசியல் கட்சிகள் ஆனது 2022-23 ஆம் நிதியாண்டில் 2,119 நன்கொடைகள் மூலம் சுமார் 217 கோடி ரூபாயைப் பெற்றதாக அறிவித்துள்ளன.
- ஒட்டு மொத்த நன்கொடைத் தொகையில் சுமார் 71% ஆன 154 கோடி ரூபாயை பாரத இராஷ்டிர சமிதி (BRS) பெற்றது.
- நன்கொடைகளில் சுமார் 90% நன்கொடைகளை - 196 கோடி ரூபாய்க்கும் அதிகமான தொகையை BRS, YSR-காங்கிரஸ், தெலுங்கு தேசம் கட்சி (TDP), திராவிட முன்னேற்றக் கழகம் (DMK), மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (CPI) ஆகிய ஐந்து மிகவும் முக்கியப் பிராந்தியக் கட்சிகள் பெற்றன.
- இவற்றில், BRS, TDP, DMK மற்றும் CPI ஆகியவை தங்கள் நன்கொடைகளில் அதிகரிப்பு பதிவாகியுள்ளதாக அறிவித்த அதே நேரத்தில் YSR-காங்கிரஸ் கட்சிக்கான நன்கொடை ஆனது 2021-22 ஆம் நிதியாண்டுடன் ஒப்பிடும்போது குறைந்துள்ளதாக அறிவித்தன.
- 2021-22 மற்றும் 2022-23 ஆகிய நிதியாண்டுகளுக்கு இடையில் ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா கட்சியினால் பெறப்பட்ட நன்கொடைகளில் மிகப்பெரிய அளவில் 3685% வளர்ச்சி பதிவாகியுள்ளது என்பதோடு இது பிராந்தியக் கட்சிகளில் மிக அதிக சதவீத அதிகரிப்பாகும்.
- அதைத் தொடர்ந்து ஜன்நாயக் ஜனதா கட்சி (1997%), TDP (1795%) ஆகியவை உள்ளன.
- மாநிலங்களில், கேரளாவைச் சேர்ந்த நன்கொடையாளர்கள் அதிகபட்சமாக சுமார் 9.09 லட்சம் ரூபாய் ரொக்க நன்கொடைகளை வழங்கினர், அதைத் தொடர்ந்து மேற்கு

வங்காளத்தைச் சேர்ந்த நன்கொடையாளர்கள் சுமார் 5.91 லட்சம் ரூபாய் ரொக்கமாக வழங்கினர்.




## ஆசியாவின் மிகவும் நெரிசலான நகரம் 2024




- 2024 ஆம் ஆண்டில் கொல்கத்தா நகரானது உலகின் இரண்டாவது மிகவும் நெரிசலான நகரமாகவும், ஆசியாவின் மிகவும் நெரிசலான நகரமாகவும் இருந்தது.
- இந்த நகரத்தில் வாகன ஓட்டுநர்கள் 10 கிலோ மீட்டர் தூரம் பயணிக்க சராசரியாக 34 நிமிடங்கள் 33 வினாடிகள் செலவிட்டுள்ளனர்.
- இதில் கொல்கத்தாவைத் தொடர்ந்து பெங்களூரு இடம் பெற்றுள்ளது என்ற நிலையில் இந்த நகரத்தில் வாகன ஓட்டுநர்கள் 10 கி.மீ தூரம் கடக்க 34 நிமிடங்கள் 10 வினாடிகள்

செலவிட்டுள்ளனர்.

- கொல்கத்தாவில் போக்குவரத்து நிலைமைகள் காரணமாக ஆண்டிற்கு சுமார் 110 மணி நேரம் இழப்பு பதிவாகியுள்ளது என்ற நிலையில் பெங்களூருவில் 117 மணி நேரமும், புனேவில் 108 மணிநேரமும், ஐதராபாத்தில் 85 மணிநேரமும் இழக்கப் பட்டு உள்ளன.
- அதே தூரத்தினைக் கடப்பதற்கு 33 நிமிடங்கள் 22 வினாடிகள் பயண நேரத்துடன் புனே இதில் மூன்றாவது இடத்தைப் பிடித்தது, இதனால் உலகின் நெரிசல் மிக்க முதல் ஐந்து இடங்களில் மூன்று இந்திய நகரங்கள் இடம் பிடித்துள்ளன.
- கொலம்பியா நாட்டின் பாரன்குவிலா நகரம் (36 நிமிடங்கள், ஆறு வினாடிகள்) முதல் இடத்தையும், இலண்டன் (33 நிமிடங்கள், 17 வினாடிகள்) இந்தத் தரவரிசையில் முதல் ஐந்து இடங்களில் இடம் பிடித்துள்ளன.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★